# கொழும்பில் சக்திவாய்ந்த குண்டு கண்டுபிடிப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 23 இதழ் 234
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9 — 10 — 1993

## 30 இளைஞர் கைது

(கொழும்பு)

கடந்த புதன்கிழமைமுதல் வாரத்தில் சந்தேகத்தின் பேரில் 30 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சக்தி வாய்ந்த குண்டு ஒன்றையும்பொலிஸார் கண்டு பிடித்துள்ளனராம்.

இவர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்

[4-ம் பக்கம் பார்க்க]

### ஜனாதிபதி மாளிகைமுன்

## பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கார்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாகவுள்ள சேர் ஜோன் ஜெயத்திலக்க மாவத்தையில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை நிற ரொயோட்டோ கார் ஒன்று நீண்டநேரம் உரிமையாளர் எவரும் அதனை எடுத்துச் செல்ல முன்வராததால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

உடனடியாக ஸ்ரீலங்கா பொலிசார் வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதுடன் குண்டு பரி

(2-ம் பக்கம் பார்க்க)

### கடும் மழையினால்

# இரத்தினபுரியில் மண்சரிவு

# 75 பேர் பரிதாபகர மரணம்!

## பல வீடுகள் அழிந்தன

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையின் காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி எழுபத்தைந்து பேர் உயிரிழந்துள்ளனர்; பலர் படுகாயமடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட மண் குடிசைகள் முற்றாக மண்சரிவினுள் அமிழ்ந்துவிட்டன.

பெண்களும், குழந்தைகளுமே இந்த மண் சரிவினுள் அதிகளவில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலைவேளை இடம் பெற்றமண்சரிவின்போது ஆண்கள்தமது வீடுகளைவிட்டுவேலைக்குவெளியேசென்றிருந்தகாரணத்தால் அவர்கள் இந்த விபத்திலிருந்து உயிர்தப்பியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - எதிர்காமம் வீதியில் கொடிகை என்ற கிரா

4-ம் பக்கம் பார்க்க)

## ஒபரேஷன்யாழ்தேவியின்பின் ஜனாதிபதி டி. பி. திணறல்!

(கொழும்பு)

யுத்தத்தின்மூலம் பெறுமதி மிக்க மனித உயிர்களையும் இயற்கை வளங்களையும் அழிப்பதைத் தவிர்த்து இனப்பிரச்னைக்கு அமைதித்தீர்வு ஒன்று காணப்படவேண்டும்.

இவ்வாறு தென்பகுதியில் அமைதியை விரும்பும் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட யாழ் தேவி ராணுவ நடவடிக்கையை அடுத்து தென்பகுதியில் பல தரப்பினரும் பலவித கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## இரண்டு முதலமைச்சர்களின் நியமனம் சட்டவிரோதம் என தீர்ப்பு

(கொழும்பு)

தெற்கு, வடமேல் மாகாண முதலமைச்சர்களான திரு. எம். எஸ். அமரசிறி, திரு. காமினி விஜயவிக்கிர பெரேரா ஆகியோர் ஆளுநர்களினால் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என மேல் நீதிமன்றம் நேற்றுக் காலை தீர்ப்பளித்தது.

சட்டப்பிரகாரம் முதலமைச்சர்களை நியமிக்கும்படி நீதிமன்றம் இவ்விரு மாகாண ஆளுநர்களுக்கும் ஆணைபிறப்பித்துள்ளது.

மேல்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் திரு. கே. பால

(4-ம் பக்கம் பார்க்க)

### கலைஞர் தீவிர அரசியலிலிருந்து

## விலகப் போவதாக அறிவிப்பு

(சென்னை)

தீவிர அரசியலில் இருந்து விலகியிருக்கப்போவதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்றுமுன் தினம் அறிவித்துள்ளார். தமது இந்த முடிவை அவர் நேற்று மாலை வரை மாற்றிக்கொள்ளவில்லை.

இதுபற்றி நேற்று தி. மு. க. பொதுச் செயலர் திரு. அன்பழகன் தெரிவிக்கையில்: திரு. கருணாநிதி நேற்றுமுன்தினம் இரவு வரை இதுபற்றி மனக் கவலையால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு உயர் இரத்த அழுத்தமிருந்தது.

செய்தியாளர்களை சந்திக்கும் மனநிலையில் தாம் இல்லை எனவும் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார். சோர்வில் இரு

(4-ம்பக்கம் பார்க்க)

## கருணாநிதி கொலைத்திட்டம் றோவின் பொய் வதந்தி

### திலகர் குற்றச்சாட்டு

(சென்னை)

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியைப் படுகொலை செய்ய விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டியுள்ளனர் என்று அப்பட்டமான ஒரு பொய்யை இந்தியாவின் மத்திய உளவுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ்ஸொன்று மண்சரிவில் சிக்கியது

(கொழும்பு)

இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்றுள்ள பெரும் மண்சரிவில் பயணிகளுடன் வந்த பஸ் ஒன்றும் சிக்கியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

தொடர்ந்தும் பெரும் மழையும் மண்சரிவும் இடம்பெற்று

(4-ஆம் பக்கம்பார்க்க)

## அகதிகளைப் பராமரிக்க 200 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

நாட்டின் சிலபகுதிகளிலுமுள்ள அகதிகளை பராமரிப்பதற்கு அரசு மாதம் ஒன்றிற்கு 200 கோடி ரூபாவை செலவிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாடு முழுவதும் ஆறு லட்சத்து நாலாயிரத்து [illegible]50 பேர் அகதிகளாயுள்ளனர். இதில் மூவினத்தவரும் அடங்குவர். ஆகக்கூடுதலான அகதிகள் யாழ். மாவட்டம்சேர்ந்

(4-ம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட்டை இம்முறை ஹேரத் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

ராஜாங்க நிதியமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத்தே 1994-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அடுத்த மாதம் 10ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளாராம்.

நிதியமைச்சர் பதவியையும் ஜனாதிபதி விஜேதுங்க ஏற்றுள்ளதால் வரவு-செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பிப்பார் என்ற ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

1994 வரவு-செலவுத் திட்

[4-ம் பக்கம் பார்க்க]

## வழக்கு தாக்கல் செய்ய ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

தெற்கு, வடமேல் மாகாண முதலமைச்சர்களின் நியமனம் சட்டவிரோதமானது என மேல்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் தமது சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

—வீ-கீ

## மீண்டும் கிளாலி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி — பூநகரிக்கான படகுச் சேவை நாளை 10-ந் திகதியும் நாளைமறுதினம் 11-ந் திகதியும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

—நி

## பீரங்கிதாக்குதல்

பண்டத்தரிப்பு

காரைநகர் - திருவடிநிலைப் பிராந்தியத்தில் கடற்படை ரோந்துக் கப்பலில் இருந்து நேற்றுக்காலை வரையோரப் பகுதியை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலையும்

[2-ஆம் பக்கம் பார்க்க]

# காமினி கட்சி சிறிமாவுடன் இணைந்து செயற்பட முடிவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவும், பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச் சந்திராவும் நேற்று முன்தினம் ரொஸ்மீட் பிளேஸிலுள்ள திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தனர்.

பொதுசன மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தூதுக் குழு ஒன்றையும் இவர்கள் அங்கு சந்தித்தனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுசன மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல்படும் என திரு. காமினி திஸநாயக்காவும் அங்கு வாக்குறுதி அளித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

எந்த ஒரு குழுவினருடனும்

# தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சு ஆரம்பிக்க கூடாது

## ஜனாதிபதிக்கு பிக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழர் பிரச்னை தொடர்பாக எந்த ஒரு குழுவினருடனும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கக்கூடாதென ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு பௌத்தபிக்கு ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்னை அல்ல. பயங்கரவாதப் பிரச்னையே என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்த கூற்றை நான் திருப்தியுடன் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் எனவே தற்போது பின்பற்றப்படும் இராணுவ ரீதியிலான அணுகுமுறை மூலம் இலங்கையில் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத ஏனைய பகுதிகளையும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஜனாதிபதி முயல வேண்டும். இதுவே தமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். —ரி

# நீதிமன்றத் தீர்ப்பினால் அரசின் சூழ்ச்சி அம்பலம்

(கொழும்பு)

இலங்கையில் ஏழு மாகாண சபைகளை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு செய்த சூழ்ச்சி நீதிமன்ற தீர்ப்பினால் அம்பலமாகி விட்டதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

பி. பி. ஸி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கை அரசுக்கு ஒரு பலமான அடி, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு தார்மீக வெற்றி.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு நீதித்துறையின் சுதந்திரத்தையும், நடுவுநிலையையும் உறுதிப்படுத்துவனவாக இருப்பதினால் வருங்காலத்தில் இலங்கை மக்களுக்கு இது ஊக்கத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வி-ரி)

# செப்ரிஸிமியா நோயினால் இரு குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாணம்

செப்ரிஸிமியா நோய்காரணமாக நேற்று முன்தினமிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இரு குழந்தைகள் மரணமடைந்துள்ளன.

செப்ரிஸிமியா நோய்காரணமாக சிகிச்சை பெற்று வந்த மீசாலையைச் சேர்ந்த முருகேசு சாந்தினி (6 மாதம்) என்னும் பெண் குழந்தையும், நடராஜா இளஞ்செல்வராஜா (7 மாதம்) என்னும் மிருசுவிலைச் சேர்ந்த ஆண் குழந்தையுமே இந்நோயினால் மரணமடைந்துள்ளன —157-ரி)

ஒபரேஷன் யாழ்தேவியில்

# ஈடுபட்ட ராணுவத்திற்கு தளபதி நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

ஒபரேஷன் யாழ்தேவியில் ஈடுபட்ட படையினருக்கு இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நன்றி தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டு வழியில் உள்ள முகாம்களை அழித்து அவர்களது படகுகளை நிர்மூலமாக்குவதையே நோக்கமாகக் கொண்டு "ஒபரேஷன் யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் யுத்தப்பகுதியில் ஆகக் கூடுதலான தூரமான 18 கி. மீ. சென்றுள்ளனர். அவர்கள் அவ்வாறு செல்லும்போது தன்மைத் தளத்துடன் எதுவித தொடர்பையும்கொண்டிருக்கவில்லை. இப்பயிற்சி எதிர்கால இராணுவ நடவடிக்கைக்கு உதவுமெனவும் தெரிவித்தார். (இ-ரி)

# யாழ்- பயணிகளுடன் கப்பல் வருகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணபயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நாளை மறுதினம் திருமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலில் காங்கேசன்துறைக்கு வரும் இக்கப்பல் யாழ். பயணிகளை இங்கு இறக்கிவிட்டு பின் காரைநகர் செல்லவுள்ளதாம்.

மீண்டும் அங்கிருந்து திரும்பும் இக்கப்பல் நோயாளிகளையும், கொழும்புவரும் பயணிகளையும் ஏற்றிக்கொண்டு திருமலை செல்லவுள்ளதாம் (இரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் 63-ம் கோவில் வீதி, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/Bt

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

அம்பாறை விநாயகபுரத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் 2ம் லெப்டினன் ஜீவாகரன் அல்லது ஜீவா (முத்ததம்பி புஸ்பராசா தம்புலுவில்) 2ம் லெப்டினன் நிரஞ்சன் அல்லது தேவதாஸ் (கணபதிப்பிள்ளை தேவதாஸ் அக்கரைப்பற்று) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## இரண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இட்ணர், திரு. சரத் என். சில்வா, திரு. டி. பி. எஸ். குணசேகரா ஆகிய நீதியரசர்கள் இம்மனுவை விசாரித்தனர். கடந்த பல மாதங்களாக இவ்வழக்கு நடைபெற்று வந்ததும் தெரிந்ததே. (சி-இ-ரி)

## பட்ஜெட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் அதிகூடிய தொகையாக பாதுகாப்புக்கு 2,448 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (இரி)

## கொழும்பில் சக்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைப் படையினரைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனபொலிஸ் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்ட இடத்துக்கு அருகேயுள்ள கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்த ஒருசிறுவன் அலுமினியப் பெட்டிஒன்றைக் கண்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தப்பெட்டிக்குள் ஒரு 'டெனிம்' மேலங்கியில் சுற்றி வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டு ஒன்று இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த மேலங்கியின் உட்புறத்தில் வெடிமருந்துகளும் அவற்றை வெடிக்க வைக்கும் உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். இ-ரி

## பயணிகள் பல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதால் சேதவிபரங்கள் மேலும் அதிகரிக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கான போக்குவரத்தும் பெருமளவு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இரி)

## அகதிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. இங்கு 2,43,420பேர் அகதிகளாயுள்ளனர்.

5 பேர் கொண்ட அகதிக் குடும்பம் ஒன்றை பராமரிப்பதற்கு அரசு வாரம் ஒன்றிற்கு 315 ரூபாவை செலவிடுகிறது. மேற்குறிப்பிட்ட தொகையிலோ அல்லது அளவிலோ குளறுபடிகள் ஏதாவது இருப்பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்குமாறு புனர்வாழ்வு அமைச்சு கேட்டுள்ளது. (இ-ரி)

## கலைஞர் தீவிர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து விடுபட வேண்டி இந்த பொறுப்புச் சுமையை விட்டு விடவேண்டும் என்று கருணாநிதியே முடிவெடுத்து வரையும் வைத்தாலோசிக்காமல் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்திருப்பதாகவும் திரு. அன்பழகன் தெரிவித்தார்.

தாமும் இதர கட்சித் தலைவர்களும் நேற்று திரு கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்ததாகவும் அவரது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறினார். திரு கருணாநிதியின் மனநிலை இன்னமும் துன்பச் சூழ்நிலையிலிருந்து விடுபடவில்லை எனவும் கூறினார்.

கட்சியின் மாவட்டச் செயலர்கள் பலர் கருணாநிதியுடன் தொடர்பு கொண்டு தமது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

கட்சியின் அடுத்த தலைமைப் பதவி குறித்தும் காங்கிரசுடனான கூட்டுக் குறித்தும் திரு. வை. கோபாலசாமி பெரும் சர்ச்சையாக இருப்பதால் அவரைக் கட்சியிலிருந்து நீக்க திரு. கருணாநிதி புலிகள் விவகாரத்தை தொடர்புபடுத்தினதைத் தொடர்ந்து கட்சி பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளதும் தெரிந்ததே. (கி-கு-ரி)

## கடும் மழையினால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மதிலின் அருகே இந்த மண் சரிவு ஏற்பட்டது.

மண்சரிவில் சிக்குண்ட மக்கள் அரசாங்க, தனியார் துறை உதவிகளுடன் மீட்கப்பட்டு வருகின்றனர்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்துக்கு அண்மையில் வசித்து வந்த 50வீடுகளைச்சேர்ந்தகுடும்பங்கள் பாதுகாப்பான மற்றுமொரு இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இதேவேளை இரத்தினபுரியில் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இரத்தினபுரி, பாணந்துறை, அக்கம இரத்தினபுரி, இரத்தினபுரி எவேலிபத்த, கிரியெல்ல, நியமகம வீதிகளில் போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி உட்பட, வெள்ளம் பாதித்த பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வாயுமண்டலத்தில் 7000 தொடக்கம் 18,000 அடி வரை காற்று வீச்சினால் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாகவே பெரும் மழை பெய்து வருவதாக வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்தது. —ம-இ-ரி-இ

## ஒபரேஷன்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இலாலி வரை சென்ற படையினர் அங்கிருந்து மீண்டும் பழைய இடத்திற்குத் திரும்பி வந்தது தவறு எனவும் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கையின் மூலம் முன்னேறி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வழிவகுக்க வேண்டுமென சிங்களத் தீவிரவாதத் தரப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தென்பகுதியிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகைகள் இந்தக் கருத்துக்களுக்கு பெரிதும் இடமளித்து வருகின்றன. குறிப்பாக அரசு யாழ்ப்பாணத்தின் யுத்தத்தைக் கைவிடுவது தவறு என சிங்களத் தீவிரவாதப் பிரிவினர் தெரிவித்து வரும் கருத்துக்களுக்கு சிங்களப் பத்திரிகைகள் முக்கிய இடம்கொடுத்துவருகின்றன.

விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டுமென ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கடந்த காலத்தில் அடிக்கடி கூறிவந்தார். இராணுவத்தின்மூலம் அதனைச் செய்ய முடியும் ஒரு தருவாயில் முன்னேறிய இராணுவத்தை அவர் எதற்காக திருப்பி அழைத்துக்கொண்டார் என சிங்களத் தீவிரவாதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்

ஜனாதிபதியின் கொள்கை எப்படியிருந்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தளங்களைக் கைப்பற்றி அவற்றைத் தமது பொறுப்பில் வைத்திருந்து பாதுகாப்பதற்கு அரசுக்கு பெருமளவு பொருட்செலவு தேவைப்படும். இதனை அரசும் ஜனாதிபதியும் நன்கு அறிவித்துள்ளனர்.

எனினும் கிளாலிக் கடல் பகுதியில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (இ-ரி)

## கருணாநிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையான ரோ வெளியிட்டுள்ளது என்று விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் பாரீஸிலிருந்து அறிவித்திருப்பதாக, தமிழ் தேசிய இயக்கத் தலைவர் திரு. நெடுமாறன் நேற்று சென்னையில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் தெரிவிக்கையில்; இலங்கையின் வடபகுதி தமிழர் மீது சிங்கள இராணுவம் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களில் ஈழத் தமிழர் மரணமுற்று வருவதினால் தமிழகத்தில் கொந்தளிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவே புலிகள் கருணாநிதியைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியுள்ளார்கள் என்ற ஒரு பொய்யை இந்திய மத்திய உளவுத்துறை கூறி தமிழக மக்களைத் திசை திருப்ப முனைகின்றது என்று தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தி மு.கவைப்பிளக்க இந்திய மத்திய உளவுத்துறையான ரோ பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தி. மு. க தலைவர் திரு. கருணாநிதியே கடந்த இலமாதங்களாக பொதுமேடைகளில் கூறிவந்துள்ளார் என்று திராவிடர் கழக பொதுச்செயலாளர் என்று திரு. கி வீரமணி நேற்று பத்திரிகையாளர் மத்தியில் கூறினார்.

ஈழத்தமிழர்மீது சிங்களப் படையினர் இனப்படுகொலைகளை செய்துவரும் இவ்வேளையில் தமிழகத்தில் ஈழத்தமிழருக்காக ஆதரவும் அனுதாபமும் எழுந்துவிடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன் இந்திய மத்திய உளவுத்துறையான ரோ அரசியல் தரகரான டாக்டர் சுப்பிரமணியசுவாமியுடன் இணைந்து கருணாநிதியைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டம் என்ற புரளியை தமிழகத்தில் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் திரு. எஸ். ராமதாஸ் நேற்று சென்னையில் தெரிவித்துள்ளார். -ரிவி